**செய்தி வெளியீடு எண்: 952** **நாள்: 27.12.2018**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (27.12.2018) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தின் வாயிலாக தமிழக அறிவியலறிஞர் விருதிற்கு தெரிவு செய்யப்பட்ட 2015–ஆம் ஆண்டிற்கான 10 அறிவியலாளர்களுக்கும், 2016–ஆம் ஆண்டிற்கான 9 அறிவியலாளர்களுக்கும், 2017–ஆம் ஆண்டிற்கான 10 அறிவியலாளர்களுக்கும் விருதுகளையும், விருதாளர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள், விருதுக்கான பட்டயங்கள் மற்றும் சான்றிதழ்களையும் வழங்கினார்கள்.

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் தமிழ்நாடு அரசின் தன்னாட்சி பெற்ற நிறுவனமாகும். இம்மன்றம் தமிழ்நாடு அரசின் உயர்கல்வித் துறையின் கீழ் இயங்கி வருகிறது. தமிழ்நாட்டின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் அறிவியல் ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் அறிவியல் தொழில்நுட்ப பரவலாக்கத்தை இம்மன்றம் ஏற்படுத்தி வருகிறது. இம்மன்றத்தின் வாயிலாக ‘‘தமிழக அறிவியலறிஞர் விருது’’ வழங்கும் திட்டம் 1993–ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு தங்களது ஆராய்ச்சியின் மூலம் பங்களித்த அறிவியலாளர்கள் கௌரவப்படுத்தப்பட்டு வருகிறார்கள். இந்த விருதுகள், வேளாண்மை அறிவியல், உயிரியல், வேதியியல், சுற்றுச்சூழலியல், பொறியியல் தொழில்நுட்பம், கணக்கியல், மருத்துவம், இயற்பியல், கால்நடை அறிவியல் மற்றும் சமூகவியல் ஆகிய 10 பிரிவுகளில் வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டிலுள்ள கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் தலைவர்களிடமிருந்து விருது பெற தகுதியானவர்களின் முன்மொழிவுகள் பெறப்பட்டு, தமிழக அறிவியல் அறிஞர் விருது தேர்வு குழுவால் ஒவ்வொரு துறையிலும் பரிந்துரைகள் பெறப்பட்டு, தகுதி வாய்ந்த அறிவியல் அறிஞர்கள் இவ்விருதிற்கு தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர். அதன் அடிப்படையில் 2015–ஆம் ஆண்டிற்கான தமிழக அறிவியலறிஞர் விருதிற்கு தெரிவு செய்யப்பட்ட முனைவர் எஸ். வின்சன்ட் (உயிரியல்), முனைவர் E. முருகன் (வேதியியல்), முனைவர் ஆர். இராஜேந்திரன் (சுற்றுச்சூழல் அறிவியல்), முனைவர் ஜி. வைஸ்லின் ஜிஜி (பொறியியல் தொழில்நுட்பவியல்), முனைவர் வி. ரேணுகா தேவி (கணிதவியல்), மருத்துவர் எஸ். குமரவேல் மற்றும் மருத்துவர்

கே. நாராயணசாமி (மருத்துவவியல்), முனைவர் ஆர். சத்தியமூர்த்தி (இயற்பியல்), முனைவர் எம். செல்வம் (சமூகவியல்), முனைவர் ஏ.வி. ஓம்பிரகாஷ் (கால்நடையியல்) ஆகியோருக்கும்;

2016–ஆம் ஆண்டிற்கான தமிழக அறிவியலறிஞர் விருதிற்கு தெரிவு செய்யப்பட்ட முனைவர் எஸ். நக்கீரன் (வேளாண்மையியல்), முனைவர் என். மதிவாணன் (உயிரியல்), முனைவர் ஆர். ரமேஷ் (வேதியியல்), முனைவர் எஸ். அன்பழகன் (சுற்றுச்சூழல் அறிவியல்), முனைவர் எஸ். கண்மணி (பொறியியல் தொழில்நுட்பவியல்), முனைவர் ஆர். உதயகுமார் (கணிதவியல்), முனைவர் எஸ். வெற்றிவேல் செழியன் (மருத்துவவியல்), முனைவர் ஆர். ஜெயவேல் (இயற்பியல்), முனைவர் ஜி. ஜெயசேகரன் (கால்நடையியல்) ஆகியோருக்கும்;

2017–ஆம் ஆண்டிற்கான தமிழக அறிவியலறிஞர் விருதிற்கு தெரிவு செய்யப்பட்ட முனைவர் எம். ரவீந்திரன் (வேளாண்மையியல்), முனைவர் எம். மைக்கேல் கிரோமிகா (உயிரியல்), முனைவர் எஸ். கருப்புச்சாமி (வேதியியல்), முனைவர் எஸ். வாசுதேவன் (சுற்றுச்சூழல் அறிவியல்), முனைவர் பி. சிவகுமார் (பொறியியல் தொழில்நுட்பவியல்), முனைவர் என். அன்பழகன் (கணிதவியல்), முனைவர் ஆர். லட்சுமி நரசிம்மன் (மருத்துவவியல்), முனைவர் கே. ஜெகந்நாதன் (இயற்பியல்), முனைவர் எஸ். கௌசல்யா (சமூகவியல்), முனைவர் ஏ.கே. திருவேங்கடன் (கால்நடையியல்) ஆகியோருக்கும்;

என மொத்தம் 29 அறிவியலாளர்களுக்கு, தமிழக அறிவியலறிஞர் விருதுகளையும், விருதிற்கான தலா 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள், பட்டயங்கள் மற்றும் சான்றிதழ்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று வழங்கினார்கள்.

இந்த நிகழ்வின் போது, மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பிஅன்பழகன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு. மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தின் உறுப்பினர் செயலர் முனைவர் இரா. சீனிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 27.12.2018**